

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (19.12.2024) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அரசு போட்டித்தேர்வுகளுக்காக சிறப்பாக பயிற்சியளித்தல் மற்றும் இளைஞர்கள் அதிக அளவில் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற செயல்பட்டதற்காக திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ரே.சுரேஷ் அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயத்தை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன் (திருப்பூர்), கே.இ.பிரகாஷ் (ஈரோடு), திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை துணைச் செயலாளர் மு.பிரதாப், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் அவர்களின் மகள் ருசிதாஸ்ரீ – அவினாஷ் இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் ஈரோட்டில் நேற்று பங்கேற்று மணமக்கள் இருவரும் கலைஞரும் – தமிழும் போல, கழகத்தலைவரும் – உழைப்பும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி மகிழ்ந்தார். உடன் அமைச்சர்கள் வி.செந்தில் பாலாஜி, மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.







துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2024) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, இளைஞர் அணி சார்பில் சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகத்தை திறந்து வருகிறோம். இதன் தொடர்ச்சியாக, திருப்பூர் வடக்கு மாவட்டம் – திருப்பூர் தெற்கு மாநகரம், திருப்பூர் தெற்கு தொகுதிக்கான 'கலைஞர் நூலகத்தை' சூர்யா நகர் பகுதியில் நேற்று திறந்து வைத்து, கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். மாணவர்கள் – பொதுமக்கள் கலைஞர் நூலகத்தைப் பயன்படுத்திக்கொள்ள என் அன்பும், வாழ்த்தும் என தெரிவித்தார்.



இனமான பேராசிரியரின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் இரயில் நிலையம் முன்பு வைக்கப்பட்டிருந்த பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், தெற்கு மாட்ட செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன், கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் இ.கே.பிரகாஷ், மாநகர கழக செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




அண்ணல் அம்பேத்கர் அவர்களை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களை கண்டித்து தாம்பரம் சண்முகம் சாலையில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டன உரையாற்றினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நாடாளுமன்றத்தில் சட்டமேதை டாக்டர். அம்பேத்கர் அவர்களை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களை கண்டித்து, சென்னை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.

## தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில்

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழா!

### சென்னை, மெரினா கடற்கரையில் இன்று முதல் 24.12.2024 வரை நடைபெறுகிறது!

சென்னை,டிச.20-

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையின் கீழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தரமான, சத்தான, ஆரோக்கியமான, பாரம்பரிய உணவுகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகின்றன.

சுய உதவிக் குழுக்கள் மூலம் தயாரிக்கப்படும் தரமான உணவுகள், முன்னணி உணவகங்களின் உணவு வகைகளின் தரத்திற்கு சற்றும் குறைவில்லாமல் அவற்றிற்கு இணையாக சுவையும், தரமும் நிறைந்த உணவுகளை முறையான பயிற்சி பெற்று சுகாதாரமான முறையில் தயாரித்து விற்பனை செய்து வருவதால், சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் உணவுப் பொருட்களை அனைவரும் அறிந்திட வேண்டும் என்ற நோக்கத்துடனும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் உணவுப் பொருட்களின் உணவுத் திருவிழா, 20.12.2024 முதல் 24.12.2024 வரை சென்னை, மெரினா கடற்கரையில் நடைபெறுகிறது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழாவை துவக்கி வைத்து சிறப்பித்திட அன்புடன் இசைந்துள்ளார்கள்.

உணவுத் திருவிழாவில், உயர்தர உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவு வகைகளுக்கு இணையான உணவுகள் மட்டுமல்லாது, தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிறப்பு வாய்ந்த சுவையும், தரமும் நிறைந்த கோவை கொங்கு மட்டன் பிரியாணி, கிருஷ்ணகிரி நோ ஆயில் நோ பாயில், கரூர் தோல் ரொட்டி மட்டன் கிரேவி, நாமக்கல் பள்ளிப்பாளையம் சிக்கன், தருமபுரி ரவா கஜூர், நீலகிரி ராகி களி அவரை குழம்பு, திருப்பூர் முட்டை ஊத்தாப்பம், காஞ்சிபுரம் கோவில் இட்லி, சிவகங்கை மட்டன் உப்புக்கறி, புதுக்கோட்டை சுக்குமல்லி காபி, ராணிப்பேட்டை ஆற்காடு பிரியாணி, வேலூர் ராகி கொழுக்கட்டை, மதுரை கறி தோசை, விருதுநகர் கரண்டி ஆம்லெட், தஞ்சாவூர் பருப்பு உருண்டை குழம்பு, திருச்சி நவதானிய புட்டு, மயிலாடுதுறை இறால் வடை, நாகப்பட்டிணம் மசாலா பணியாரம், கன்னியாகுமரி பழம் பொறி, சென்னை தயிர் பூரி உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட உணவு வகைகளை, 65 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட மகளிர் உடனடியாக சமைத்து, சுகாதாரமான முறையில் பரிமாறும் வகையில் 35 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

உடனடியாக சமைப்பதற்கும் மற்றும் உண்ணுவதற்கும் ஏற்ற (Ready to Eat) உணவு வகைகளான அரியலூர் வறுத்த முந்திரி, செங்கல்பட்டு நாட்டுச்சர்க்கரை எள்ளுருண்டை, சென்னை வேர்க்கடலை நெய் லட்டு, கருப்பு கவுனி அரிசி லட்டு, கோவை பீட்ரூட் மால்ட் பொடி, கடலூர் சங்குப்பூ சர்பத், தருமபுரி குதிரைவாலி ரோஸ் லட்டு, திண்டுக்கல் காராபூந்தி, ஸ்ரீவில்லிப்புத்தூர் பால் கோவா, காஞ்சிபுரம் முட்டை மிட்டாய், சேலம் ஆட்டையாம்பட்டி முறுக்கு, கரூர் பாசிப்பருப்பு உருண்டை, கிருஷ்ணகிரி மசாலா தட்டுவடை, மதுரை தொத்தல், நாகப்பட்டிணம் சுண்டைக்காய் வத்தல், நீலகிரி ஸ்ட்ராபெர்ரி ப்ளூபெர்ரி, இராமநாதபுரம் லோத்தல், தென்காசி தேன் நெல்லி, திருநெல்வேலி அல்வா, தூத்துக்குடி உடன்குடி கருப்பட்டி, திருச்சி மணப்பாறை முறுக்கு, திருவண்ணாமலை சிமிலி உள்ளிட்ட 67 வகையான தயார் நிலை உணவுப் பொருட்களை, உணவுத் தரச் சான்றிதழ் (FSSAI) பெற்ற 24 குழுக்களைச் சேர்ந்த மகளிர் சுகாதாரமான முறையிலும், கலப்படம் ஏதுமின்றியும் தயாரித்து, தகுந்த முறையில் கட்டுமானம் (Packaging) செய்து விற்பனை செய்திட 6 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட 45 வகையான பொருட்கள் 3 அரங்குகளில் விற்பனை செய்யப்பட உள்ளன.

துவக்க நாளான 20.12.2024 அன்று மட்டும் மாலை 04.00 மணி முதல் இரவு 08.30 மணி நடைபெறும் உணவுத் திருவிழா, 21.12.2024 முதல் 24.12.2024 வரை மதியம் 12.30 மணி முதல் இரவு 08.30 மணி வரை நடைபெறும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடும் வகையிலும், அவர்களின் செயல்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் பொதுமக்கள் அனைவரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழாவிற்கு வருகை தந்து, சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் சத்தான, சுவையான, ஆரோக்கியம் நிறைந்த உணவுப் பொருட்களை உண்டு மகிழ்ந்திடவும், வாங்கிச் சென்றிடவும் அன்புடன் அழைக்கிறோம்.

உணவுத் திருவிழாவிற்கு வருகை தரும் பொதுமக்கள், லேடி விலிங்டன் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் ராணி மேரி கல்லூரி ஆகிய கல்லூரிகளின் வளாகங்களில் இலவசமாக வாகனங்களை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலவச வாகன நிறுத்துமிடங்களில் தங்களின் வாகனங்களை நிறுத்தி விட்டு, உணவுத் திருவிழாவிற்கு வருகை தரும்படி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனுமதி இலவசம். அறுசுவை உணவுகளை உண்டு மகிழ அனைவரும் வருக.



காஞ்சிபுரத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களை நாடாளுமன்றத்தில் இழிவுபடுத்தி பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கண்டன உரையாற்றினார். உடன் மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு கே. ஆறுமுகம், மேயர் திருமதி. மகாலட்சுமி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வி.எஸ்.இராமகிருஷ்ணன் உள்ளிட்ட பகுதி செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.